**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 263/2019 connected with 268/2019**

பெயர் : பன்னீர் P.W.2.

த/பெ. : ராசாங்கம்

தேதி : 22.04.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை:–

நான் தில்லையாடி வாடித்தெருவில் வசித்து வருகிறேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தா என்றால் இல்லை. என்னை வாதி சரோஜா தான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால் சென்னை மற்றும் பல்வேறு இடங்களில் வேலை பார்த்து வருகிறேன். நான் சென்னையில் சென்ட்ரிங் வேலை செய்யும்போது சுமார் 6 மாத காலம் அங்கேயே தங்கி வேலை செய்து வருவேன். இந்த வழக்கை யார், யாருக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரோஜா அவரது வீடு மற்றும் இடம் சம்பந்தமாக பத்மாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து வாடித்தெருவில் உள்ளது. தாவா சொத்திற்கு கீழ்புறம் சங்கர் வீடும் உள்ளது. மேல்புறம் திடலாக உள்ளது. அது யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. வடபுறம் வயல் உள்ளது. தென்புறம் பிள்ளையார் கோவில் உள்ளது.

வாதியின் தந்தையார் சண்முகத்தை எனக்கு தெரியும். சண்முகத்தின் மனைவி பெயர் செல்லம்மாள் என்றால் சரிதான். சண்முகம் என்பவர் தான் ஆரம்பத்தில் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். சண்முகம் உயிருடன் இருந்தபோதே தாவா சொத்தில் செல்லம்மாள் என்பவர் கூரை வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் சரிதான். தற்போதும் தாவா சொத்தில் செல்லம்மாள் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. சரோஜா தான் வசித்து வருகிறார். தாவா சொத்தில் செல்லம்மாள் தான் குடியிருந்து வருகிறார் என்றாலும், வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றாலும் சரியல்ல.

சரோஜாவும் அவரது மகனும்தான் வசித்து வருகிறார்கள். செல்லம்மாள் அவரது பேரன் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு சென்றுவிடுவார். தாவா சொத்திற்கான பட்டாவை நான் 1989 ஆம் ஆண்டில் பார்த்துள்ளேன். அப்போதே யார் என்னிடம் காண்பித்தார்கள் என்றால் பட்டாவை வாதி தான் காண்பித்தார். எதற்காக காண்பித்தார்கள் என்றால் பிரச்சனை ஏற்பட்டதால் காண்பித்தார். என்ன பிரச்சனை என்றால் வீடு தங்களுக்குதான் பாத்தியப்பட்டது என வாதிக்கும் அவரது சகோதரிக்கும் இடையே ஏற்பட்டது.

எனக்கு சொந்தமாக தொகுப்பு வீடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் வழக்கறிஞரிடம் கூறினார்கள் என்றால் நான் கூறவில்லை. சரோஜாவிற்கு 1989 ஆம் ஆண்டிற்கு முன்பே திருமணம் நடந்தது. அவர் திருமணத்திற்கு பிறகு காரைக்காலில் சென்று வசித்தார் என்றால் சரிதான். அதன் பிறகு தில்லையாடியில் வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். 2001 ஆம் ஆண்டு முதல் தில்லையாடி, சிவன் மேல வீதியில் வாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கூரை வீடு போதிய இடவசதி இல்லாததால் செல்லம்மாள் தாவா சொத்தில் புதிதாக கூரை வீடு கட்டினார் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் பழைய கூரை வீட்டை இடித்து விட்டு காலி இடமாக உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்து வாதியின் பெற்றோரின் சொத்தாகும்.

நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து விபரம் எனக்கு தெரியாது என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல.